முதியோர் பயனுற, கட்டணமில்லாப் பேருந்து பயணச் சலுகையை வழங்கி, தேர்தல் வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்றிய ஒரே முதல்வர்; (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கும் மேலாக செயல்படுத்திய தலைவர், முதல்வர் என்ற பெருமையைச் சேர்த்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அருள்தரும் தெய்வங்கள் மண்ணிலே ஆயிரம் இருக்கலாம். ஆசிகள் வழங்கும் முதியோர் என்னும் தெய்வங்களைத் தாங்கும் தலைவராய், முதியோர் குலம் காத்து, வளம் சேர்க்கும் குல தெய்வமாய் மாண்புமிகு அம்மா அவர்கள் தொண்டு செய்து வருகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முதியோர் கோரிக்கைகளைக் கேட்க யாரும் இல்லை என்பது அன்றைய காலம். அந்தக் கால சாபத்தைப் போக்கி, சோகத்தை நீக்கி, சுவாமி விவேகானந்தரின் குருவான இராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்களின் பிறந்த நாளான இன்று, 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இலவச பஸ் பயணம் என்ற அறிவிப்பை வெளியிட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் பிறந்த நாள் முதல் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என வரமாகத் தந்தருளி, சேய் காக்கும் தாயாக முதியோர்தனைக் காக்கும் முதல்வராக, தொடர்ந்து முடிசூடவுள்ள (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்குப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

5. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர். (குறுக்கீடுகள்) திரு. வி.சி. சந்திரகுமார், நான் வேறு அலுவலுக்குள்ளே சென்று விட்டேனே? பிறகு என்ன? (குறுக்கீடுகள்) அதுதான் இன்றைக்கு அம்மா அவர்கள் ஓர் அற்புதமான அறிவிப்பைத் தந்திருக்கிறார்களே! அதற்குப்பிறகு என்ன? (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் பொது விவாதத்தில் பேசப்போகிறீர்கள். ஏதாவது இருந்தால் அப்போது பேசலாம். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, என்ன? சொல்லுங்கள்.

2016 பிப்ரவரி 18]

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாற்றுத் திறனாளிகள். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் பேசும்போது உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பேசுவீர்கள் அல்லவா? அப்போது உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அதெல்லாம் என்னுடைய ஆய்வில் உள்ளன. அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாகக் கேட்க முடியாது. அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்வில் உள்ளது குறித்து நீங்கள் கேட்க முடியாது. (குறுக்கீடுகள்) என்ன? செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. வி.சி. சந்திரகுமார், நீங்கள் பேசுவீர்கள் அல்லவா? அப்போது பேசலாம். உட்காருங்கள். செல்வி கே. பாலபாரதி, சொல்லுங்கள்.

நண்பகல் 12—00

[தேசிய முற்போக்கு திராவிடக் கழக உறுப்பினர்கள் (திரு. சி. மைக்கேல் ராயப்பன், திரு. செ. அருண் பாண்டியன், திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. க. தமிழழகன், திரு. டி. சுரேஷ்குமார், திரு. க. பாண்டியராஜன், திருமதி ஆர். சாந்தி மற்றும் திரு. மு. அருண் சுப்பிரமணியன் ஆகியோர் தவிர) அவையிலிருந்து வெளியேறினர்.]

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்திப் போராடிக் கொண்டிருந்த மாற்றுத் திறனாளிகள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. அதை நீங்கள் வற்புறுத்த முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன், இருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர் க. கிருஷ்ணசாமி.

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்ற விஷயங்கள். அதைப்பற்றியெல்லாம் நீங்கள் என்னிடம் கேட்க முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) டாக்டர்

கிருஷ்ணசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

6. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன் அவர்கள். (குறுக்கீடுகள்)*

திரு. பி.ஜி. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யாருமே எதிர்பார்க்காத வகையில், சங்கம் வளர்த்த மதுரை மாநகரில், தமிழ்த்தாய்க்கு சிலை அமைக்க உத்தரவு பிறப்பித்து, தமிழ் மொழியின் பாரம்பரியப் பெருமையை உயர்த்திக் காட்டிய (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திருமதி எஸ். விஜயதரணி, கொஞ்சம் இருங்கள். அவர் குழுவின் அறிக்கையை அளிக்கிறார்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, இன்றைக்கு நீங்கள் பொது விவாதத்தில் பேசப்போகிறீர்கள்; உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இன்று பேச இருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இன்று பேச இருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) செல்வி கே. பாலபாரதி, நீங்கள் இன்று பேச இருக்கிறீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசும்போது பேசலாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. பி.ஜி. நாராயணன்: *அனைத்துத் தரப்பு மக்களையும் வாழ வைக்கும் வகையில் எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி பொற்கால ஆட்சி நடத்திவரும் ஏழைகளின் இதய தெய்வம்*